செய்தி வெளியீடு எண்: ~~347~~ 351/2017 நாள்: 15.06.2017

<u>வாக்காளர் பட்டியலில் முதல் தலைமுறை வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் விடுபட்ட வாக்காளர் பெயர் சேர்ப்பு சிறப்பு முகாம் நடத்துவது குறித்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருடன் ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியலில் முதல் தலைமுறை வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் விடுபட்ட வாக்காளர் பெயர் சேர்ப்பு சிறப்பு முகாம் நடத்துவது குறித்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருடன் ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வாக்காளர் பட்டியலில் முதன்முறை (18 முதல் 21 வயதுடையோர்) வாக்காளரிடையே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது தொடர்பாக போதிய விழிப்புணர்வு இல்லாததால் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அத்தகைய வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் ஜூலை மாதம் 1 முதல் 31 வரை சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது.

வேலூர் மாவட்டத்தில் இச்சிறப்பு முகாம் சிறப்பாக நடத்திட உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்களாகிய அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்களிலும், வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகமாகிய சார் ஆட்சியர்/வருவாய் கோட்ட அலுவலகங்களிலும் ஜூலை 1 முதல் 31 வரை 18-21 வயதுடையோர் பெயர் சேர்ப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் இதுமட்டுமல்லாமல் அரசு விடுமுறை நாளான 9.7.2017 மற்றும் 23.7.2017 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமைகளில் 1627 வாக்குச்சாவடி அமைவிடங்கள் மற்றும் மேற்படி அலுவலகங்களில் சிறப்பு முகாம் நடத்தி பெயர் சேர்ப்பதற்கான படிவங்கள் பெறும் பணி மேற்கொள்ளப்படும். இப்பணியை மேற்கொள்ள ஏதுவாக 3439 வாக்குச்சாவடிக்கு வாக்காளர் பட்டியல் களப்பணியாளர்கள்(BLOs) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் வாக்குச்சாவடி அமைவிடங்களான 1627 மையங்களிலும் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்/உதவி தலைமையாசிரியர் பொறுப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டு மேற்கூறிய இரு முகாம் தினங்களிலும் வாக்குச்சாவடி மையங்களில் ஆஜரில் இருந்து படிவங்கள் பெற உத்தரவிடப்பட்டுள்ளது. **வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட தேர்தல் ஆணையம் இணையதளம் மூலமாகவும் விண்ணப்பிக்க <u>www.elections.tn.gov.in</u> என்ற இணையதள முகவரியிலும் எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பம் செய்து பெயர் சேர்த்துக் கொள்ளலாம்.** இப்பணி நடைபெறுவதை கண்காணிக்க 224 மேற்பார்வை அலுவலர்களும் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு துணை ஆட்சியர் நிலையிலான அலுவலர் கண்காணிப்பு பணி மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேலும் சிறப்புர நடைபெற **ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரும் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்குச்சாவடி முகவர் நியமனம் செய்து கொள்ள தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.** அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரும் வாக்குச்சாவடி முகவர் நியமனம் செய்து அதன் நகலினை மாவட்ட தேர்தல் அலுவலர், வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு பட்டியல் வழங்கிட தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி பட்டியல் களப்பணியாளர்களுக்கு உறுதுணையாக இருந்து வாக்காளர் பட்டியல் செம்மைப்படுத்த உதவிட வேண்டும்.

இச்சிறப்பு முகாமின்போது இறந்த / இருமுறை பதிவு கொண்ட / வெளியூர் சென்றுவிட்ட வாக்காளர் பெயர் நீக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது என்பதையும் அனைத்து அரசியல் கட்சியினருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வேலூர் மாவட்டத்தில் உள்ள 18+ வயதுடையோர் கல்வி பயிலும் கல்வி நிறுவனங்களிலும் சிறப்பு முகாம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஏதுவாக அந்தந்த கல்லூரி மாணவர் ஒருவரை வளாக தூதுவராகவும் (CAMPUS AMBASSADOR), அலுவலர் ஒருவரை தொடர்பு அலுவலராகவும் (NODAL OFFICER) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரும் 18 முதல் 21 வயதுடைய வாக்காளரிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தி, வேலூர் மாவட்டத்தில் இச்சிறப்பு முகாம் செம்மையாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன். வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.செல்வராஜ், திருமதி.ராஜலட்சுமி,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தேர்தல் திரு.நாராயணன், தேர்தல் வட்டாட்சியர் திரு.விஜயகுமார், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் நகராட்சி அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

செ.மக்.தொ.அ., வேலூர்-9. 5/6/17